**S.T.C No.28/2021**

**Dated: 19.09.2024**

**PW: 1** கோபாலகிருஷ்ணன்

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நீங்கள் எந்த ஊரில் குடியிருந்து வருகிறிர்கள் என்றால் நான் கழுகுமலையில் குடியிருந்து வருகிறேன். என்ன தொழில் செய்து வருகிறிர்கள் என்றால் ரியல் எஸ்டேட் மற்றும் விவசாயம் ஆகிய தொழில்களை செய்து வருகிறேன். உங்கள் பெயரில் இடங்களை வாங்கி விற்பனை செய்விர்களா என்றால் இல்லை. அட்வான்ஸ் போட்டு வேறு நபருக்கு கிரையம் செய்து கொடுத்துவிடுவேன்.

2. வழக்கில் கண்ட பணம் கொடுக்கும்போதுயார் இருந்தார்கள் என்றால் பால்சாமி , விஜயராஜ் ஆகியோர்கள் இருந்தார்கள். இந்த பால்சாமிக்கு எந்த ஊர் என்றால் தெற்கு திட்டங்குளம்,. விஜயராஜிவுக்கு எந்த ஊர் என்றால் அவரும் தெற்கு திட்டங்குளத்தை சார்ந்தவர். பணம் கொடுத்ததாக சொல்வது தெற்கு திட்டங்குளத்திலையா என்றால் இல்லை. கழுகுமலையில் உ்ள்ள எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். நீங்கள் குறிப்பிடும் புரோ நோட்டில் ஒரு ரிவென்யூ ஸ்டாம்ப் ஒட்டப்பட்டு இருந்ததா அல்லது 2 ரிவென்யூ ஸ்டாம்ப் ஒட்டப்பட்டு இருந்ததா என்றால் இரண்டு ஸ்டாம்ப் ஒட்டப்பட்டு இருந்தது.

3. இரண்டு ரிவென்யூ ஸ்டாம்ப்க்கு மேலேயே கையொப்பம் இருந்ததா என்றால் ஆமாம். அந்த கையொப்பம் பேனாவால் போடப்பட்டது என்றால் ஆமாம். அந்த புரோ நோட்டு தட்டச்சு செய்யப்பட்டது என்றால் இல்லை. ரூ100 பத்திரத்தில் எழுதப்பட்டு இருந்ததா என்றால் இல்லை. கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட புரோ நோட்டு என்றால் இல்லை. வேறு என்ன புரோ நோட்டு என்றால் பிரிண்டர் புரோ நோட்டு. அது வெள்ளை நிறத்தில் இருந்தது என்றால் சரியல்ல. கான்ங்கர் பேப்பரில் இருந்தது.

4. மேற்படி புரோ நோட்டு எழுதியது யார் என்றால் ஆஜர் எதிரி ஆபிரகாம் எழுதிகொண்டு வந்து என் முன்னிலையில் கையொப்பம் செய்தார். அந்த புரோநோட்டுக்கு கீழே எழுதியவர் என்ற இடத்தில் யார் பெயர் உள்ளது என்றால் யார் பெயரும் இல்லை. புரோநோட்டில் கையொப்பம் மற்றும் கைரேகை என இரண்டும் உள்ளது என்றால் ஆமாம். அதில் சாட்சி கையொப்பம் செய்தது என்றால் மேற்படி பால்சாமி, விஜயராஜ். புரோ நோட்டு ரூ5,25,000/-க்கு எழுதப்பட்டது என்றால் இல்லை.

5. மேற்படி புரோ நோட்டின் பின்பக்கம் ஏதேனும் எழுதப்பட்டு இருந்ததா என்றால் இல்லை. நீங்கள் குறிப்பிடும் புரோ நோட்டுஉங்கள் வசம் உள்ளது என்றால் ஆமாம். அந்த புரோ நோட்டில் என்ன தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 17.02.2019. புகார் மனுவில் சாட்சிகளாக உங்களை தவிர இரண்டு வங்கி மேலாளர்களை குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்,கள் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகளை கொண்டு உங்களது வழக்கை நிருபிக்க போதுமான என கருதுகிறிர்கள் என்றால் சரிதான்.

6. புரோநோட்டில் கையொப்பம் மற்றும் கைரேகை என இரண்டும் உள்ளது என சாட்சியம் அளித்துள்ளீர்கள் இந்த கைரேகை புரோ நோட்டில் உள்ள ரிவென்யூ ஸ்டாம்ப்க்கு மேலே இருக்கிறதா அல்லது கீழே இருக்கிறதா என்றால் ரிவென்யூ ஸ்டாம்ப்லும் ரோ நோட்டிலும் சேர்ந்தவாறு உள்ளது.

**எதிரியின் வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.K.Baskar
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti.